விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார றோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம் செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம்வர வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா! நாடு நலம்பெற நாம் நற் சேவைசெய்ய எமது உற்பத்திப் பொருள்களுக்கு உங்கள் அமோக ஆதரவு பெருகட்டும்.
வணக்கம்.
அதிபர்
மில்க்வைற்- த.பெ.எண்-77,
யாழ்ப்பாணம்

மலர் 31 | ஐப்பசி 25 | துல்ஹஜ் 20 | ஞாயிற்றுக்கிழமை | (11—11—79) | இதழ் 272

RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

# கூட்டணித் தலைவர்களே
# பிரிவினையை விரும்பவில்லை

## யாழ். நகரில் மக்கள்விடுதலை முன்னணிப் பிரமுகர்

(யாழ்ப்பாணம்)

"தென்னிலங்கையில் வாழுகின்ற முதலாளித்துவவாதிகள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அம் மக்களின் சிந்தனையைத் திசை திருப்புவதற்காக வடக்கு கிழக்கில் பயங்கரவாத இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது- அதற்கு எதிராக நாம் போராட வேண்டும் என்று கூறுகிறார்கள். அதேபோல வடபகுதியிலுள்ள கூட்டணித் தலைவர்களும் இந்த நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் உண்மையில் கூட்டணித் தலைவர்களுக்கு இந்த நாட்டை கூறு போட விருப்பமில்லை"

நேற்று முன்தினம் யாழ் திறமர் மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டத்தில் மேற்படி முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் திரு. வாசுதிலகரத்ன பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு எம் நாகராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. வாசுதிலகரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தென் இலங்கையில் வாழுகின்ற முதலாளித்துவ அரசியல்வாதிகளும் தமிழ்ப் பகுதிகளில் வாழுகின்ற முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும்தான் இந்த பயங்கரவாத இயக்க ஆரம்பமாவ [illegible] வன்றி இளைஞர்களல்ல.

பயங்கரவாதத்தினால் எதையும் சாதித்துவிடமுடியாது. வடகிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் மீது முதலாளித்துவ சக்திகள் பயங்கரவாதத்தைப் பிரயோகிக்கின்றன. மக்கள் விடுதலை முன்னணி அந்த சக்திகளுக்கு எதிராக தனது நடவடிக்கைகளில் ஈடுபடும்.

25 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லத் தகுதியுடையவர்கள். ஆனால் 5 ஆயிரம் பேருக்கு மட்டும் தான் அனுமதி கிடைத்துள்ளது. தரப்படுத்தலினால் தமிழ் மாணவர்கள் மட்டும்

(10-ம் பக்கம் பார்க்க)

## இந் நூற்றாண்டின் பயங்கர குற்றவாளி மன்னர் ஷா
### ஈரான் வெளிநாட்டமைச்சர் கூறுகிறார்

தெஹ்ரான், நவ. 10

ஈரான் முன்னாள் மன்னர் ஷாவே இந்த நூற்றாண்டின் மிக மோசமான பயங்கரக் குற்றவாளி என்ற காரணத்திற்காக அவர் மீது விசாரணை நடத்தும் பொருட்டு அவரை ஈரானுக்குத் திருப்பி அனுப்புமாறு ஈரான் வற்புறுத்துகிறது என்று புதிய ஈரான் வெளிநாட்டமைச்சர் பனிசதார் தெரிவித்துள்ளார்.

மன்னர் ஷா அமெரிக்காவிலேயே மரணமாகிவிட்டால் அவர் புரிந்த எத்தனையோ அநியாயங்களுக்கு பதில் சொல்லமுடியாமல் போய்விடும் என்றும் அவர் கூறினார்.

ஷாவைத் தண்டிப்பதிலும் பார்க்க ஈரானில் அவர் செய்த கட்டுழியங்களை ஒவ்வொன்றும் [illegible] வது அவசியம் என்றும் அவர் கூறினார். (இ)

## பொலிஸ்-நகை வியாபாரிகள் நல்லுறவுக் கருத்தரங்கு

யாழ்/பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியாவின் தலைமையில் இன்று 11-ம் திகதி (11-11-79) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு வட இலங்கை நகை வியாபாரிகள் சங்க அலுவலகத்தில் (A.K.S. மேல்மாடியில்) பொலிஸ்-நகை வியாபாரிகளின் நல்லுறவுக் கருத்தரங்கு நடைபெறும்.

வடபகுதியில் உள்ள சகல நகைவியாபாரிகளும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வட இலங்கை நகை வியாபாரிகள் சங்கம்
4058

## பின்போடப்பட்டுள்ளது

Y. M. S. A யின் ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று (11-11-79) வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறவிருந்த பரத நாட்டிய நிகழ்ச்சியும், ஆண்டுவிழா நிகழ்ச்சிகளும் தவிர்க்கமுடியாத காரணங்களால்பின்போடப் பட்டுள்ளன.

(4059) அங்கத்தவர்கள்

இலங்கை-இந்திய ரசிகர்களின் வசதிக்காக
கொழும்பு - யாழ்ப்பாணம்
எஸ். சின்னத்துரை அன் பிறதர்
ஆதரவில்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
6-ம் இலக்க கலையகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட
பிரபல தென்னிந்திய திரைப்பட பாடகர் கலைமாமணி
ரி.எம்.சௌந்தரராஜனின்
இன்னிசைக் கச்சேரியை இன்று ஞாயிற்றுக்கிழமை
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில்
பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை கேட்டு மகிழலாம்.
எஸ். சின்னத்துரை அன் பிறதர்
யாழ்ப்பாணம்.
போன்: 284 தந்தி: கல்கி

## மத்தியகிழக்கில் வேலை வாய்ப்பு
(சாரதிகள், மெக்கானிக்மார்)

திறமை வாய்ந்த, ஐந்து வருடத்துக்கும் குறையாதஅனுபவம்மிக்க சாரதிகளும் (Heavy Vehicle Drivers with International Licence), திறமை மிக்க மெக்கானிக்மாரும் (Mechanics), உடனடியாகத் தேவை. பாஸ்போர்ட், அத்தாட்சிப் பத்திரங்கள், நான்கு புகைப்படங்கள் ஆகியவற்றுடன்நாளைதிங்கட்கிழமை காலை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு வரவும். ஆங்கில அறிவு அவசியம்.

Lanka Gulf Enterprises
69/2, ALVITIGALA MAWATHA,
COLOMBO 8
Labour Dept. Licence: 312
(4068)

யாழ். பஸ்நிலையத்தின் முன்பாக, மக்கள் ஆதரவுபெற்ற நியாய விலைக்கடை பெனின்சுலா ரேட் சென்டர்
● பலசரக்குச் சாமான்கள் ● பாலுணவு வகைகள், பாவனைப் பொருட்கள் ● அலங்கார அழகுசாதனப் பொருட்கள்
● அன்பளிப்புப் பொருட்கள் ● கேக் சாமான்கள் ● இறக்குமதிசெய்த அப்பிள்
அனைத்தையும் நியாய விலையில்பெற்றுக்கொள்ள நாடுங்கள்...

# பெனின்சுலா ரேட் சென்டர்

61, மின்சாரநிலைய வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

# ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாணச் சரித்திரம்

## பிரிட்டிஷ் மா நூலகத்தில் இருக்கிறது

(முன் தொடர்ச்சி)

முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் இயற்றிய யாழ்ப்பாணச் சரித்திரம் 1912-ல் வெளிவந்தது. அதன் முதலாவது பதிப்பு லண்டன் பிரிட்டிஷ் மா நூலகத்தில் கீழைத்தேச நூல்கள் பிரிவில் உண்டு. இதில் அக்காலத்து தலைவர்கள், பண்டைக் காலத்து அரசர்கள், பெரியோர்கள் முதலியன காணப்படுகின்றன. பிறநாட்டார் நம்நாட்டுச் சரித்திரத்தை எழுதும் பொழுது அவர் கண்டபடியாகப் பார்த்து திரித்துப் பட்சபாதமாக எழுதுவர். ஆனால் இது ஈழத்தமிழர் தேசிய வரலாறு. ஆராய்ச்சி முன்னேறி வரும் நாட்களில் அதனுடைய முக்கியத்துவத்தைப் பலர் உணருவர். இதில் அதிக சமூக, சமய விரங்கள், குறிப்புக்கள் தொடராக எழுதப்பட்டுள்ளன. அதனை வாசித்தால் நம் நாட்டுப்பற்றும், நமது மொழிப் பற்றும் ஏற்பட்டு ஒளிரும்.

1912-ல் ஆண்டு தமிழ்ப் பாஷையைப் படிக்கும் தமிழரல்லாதோருக்கென Civilians-Tamil Gramme என்னும் சிறந்த தமிழ் இலக்கண நூலை வெளியிட்டார்.

1912-ல் ஆ. மு. அவர்கள் வண்ணார்பண்ணை வாசகர் ஆறுமுக நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடுவித்து வெளியிட்டார். அது அதே ஆண்டு நடைபெற்ற சில இளமைப் பொருட்காட்சியின் அழகாக அச்சிட்டு வெளியிட்ட நூல்களுக்கு வெள்ளிவிருதும் சான்றுப்பத்திரமும் கிடைத்தது.

1900 தொடக்கம் ஆ. மு. அவர்கள் எழுதி வெளியிட்ட இலகுபோத பாலபாடங்கள் (1-8) பொதுவாக எல்லா மதத்திலுமுள்ள மாணவர்களுக்கு ஏற்ற முறையில் சித்திர சகிதமாக, அச்சிடப்பட்டு இலங்கையில் பல பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்பட்டன.

1917-ல் ஆ. மு. அவர்கள் எழுதிய தென்மொழி வரலாறு 1899-ல் சபாபதி நாவலரால் வெளியிடப்பட்ட திராவிடப் பிரகாசிகைக்கு அடுத்து வெளிவந்த தமிழ் இலக்கியவரலாறு இது தலைசிறந்த வரலாற்று நூல்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளியிட்ட முக்கிய நூல்களில் இருந்து குறிப்புகள் தந்து அவருக்குச் சென்னைக் கல்விக் குழாத்தினர் கொடுத்த "செந்தமிழ் வசன சிங்கம்" என்னும் பட்டம் மிகமிகப் பொருத்தமானதாகும் என்பதை நிறுவுவோம்.

பின்வருவன 2ம் பகுதி தொடர்ச்சி. ஆ. மு. அவர்களின் வசனநடை வளர்ச்சியை அறிதாலிக்க. 1883 இலங்கைச் சரித்திர சூசனம் விஷய சூசிகை அ 1314 குருநாகலை நகராசிக்கப்பட்டது. ஆதியில் குருகுல மன்னராகிய துரியோதனாதியரும், பஞ்ச பாண்டவர்களும் யுத்தம் செய்த குருசேத்திரத்திலிருந்து வந்த பிரஜைகளால் குடியேற்றப் பட்டமையால் குருநாகலை என வந்தது. குருநாகலை என்பது மருவிக் குருநாகலையென்றாயிற்று. குரு= குருசேத்திரத்தார் (வாசஞ் செய்கின்ற) நகர= நகர் உபசர்க்கம் போலும். அன்றி வைசிரவணன் அதற்குப் பெயர். அன்றி = பாலை, மலை—மலை.

ஆ. மு. வசன நடையின் போக்கும் வளர்ச்சியும், காளிதாச சரித்திரம் 1885 பக் 89, 26 4ம் பதிப்பு 1932, "இதன் பின்னர் ஒருநாள், அரசன் ஸ்நானத்தின் பொருட்டுத் தனக்குரிய பூந்தடாகத்துக்குப் போய்ப் படித்துறையில் நின்றான். அப்போது அந்தப் புறத்துச் சேடியொருத்தி, அரசனைக் கண்ணுற்றுக் காமலகரியாய் தன்வசமிழந்து இடை விற்றுவிட்டு தன் குடத்தைச் சோரவிடுத்தாள். அஃது அப்படித்துறையில் விழுந்துருண்டோடும்போது டடட டட டடட மென்று ஒலியுடன் ஓடிற்று. அவ்வொலிக்குறிப்பை அரசன் மனனம் பண்ணிக்கொண்டு ஸ்நானத்தை முடித்துச் சபைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே காளிதாசன் வந்து குப்பக்கண்டு அதனைக்கேட்ட காளிதாசன் நிகழ்ந்ததனைத்தையெல்லாம் முடன் நின்று கண்டான் போன்று சொன்னான்."

மன்னன்மேல் வைத்த விழி
வாங்காமல் நீர்த்தாதி
தன்னீர்க் குடத்தை நழுவ
விட்டாள்—பொன்னந்
தடஞ்சூழ் படிக்கவி டடட
டட டடட
டடட டடடட மெழ,

பிரபோத சந்திரோதயம் 1889. பக் 128.

### வரலாற்றுவாணர் வை. மூத்துக்குமாரசுவாமி

உன்னால் கட்டப்பட்ட இராமனும் வீமனும் அன்று நமதரசிரைமையைத் தம்பியர்க்குக் கொடுத்தது தந்தையர் பொருட்டோ அன்றி தம்பியர் பராக்கிரமத்தினாலோ இதனைச் சிந்தித்தாயில்லை. இந்த நன்றுடன்னாக்கு தனக்காகக் கட்டிக் கொள்வதற்கும் ஈனர் வசிக்கின்ற நாட்டை எனக்குக் கொடுத்தற்கும் விவேகனைய சூழ்ச்சி நன்றுயிருக்கின்றது. இளையானுதவின் அவன் பிழையை இன்னும் பொறுத்த மீண்டும் அவனுக்குக் காட்டைக் கொடுப்பதேயன்றி. இந்நன்னீர்க் கழனி நாடுகளை நான் கனவிலும் அவனுக்குக் கொடுப்பதில்லை.

(ஆ) பிரபோத சந்திரோதயம் 1889

பக் - 130 மூன்றாம் பாகம் (கடைசிப் பந்தி)


அது கேட்டுக் கோபமிகக் கொதிக்க வாய் துடிக்க மீசை நிமிர உயிர் பொங்கக் கண்கள் தீப்பொறி சிந்த வெழுந்து, நியாயன் உயிரை ஒரு நொடியிலுண்பேனென்று சேனையை நோக்கி, பக்தி மாதரது அருளுண்டென்று தருக்கிக் குதிக்கின்ற இத்தூதனைக் கொல்லுவதற்கு இவ்வக்கிரமன் ஒருவனே போதுவன் ஆயினும், தூதரைக் கொல்லுதல் தகாதென்று பெரியோருரைத்தார் ஆதலின் இவனுயிர் பிழைத்தான் என்று கூறி, நியாயனைப் பார்த்துச் சினந்து, இச்சபையை விட்டுப் பாறிச் செல் என்றான்.

1898 வைத்திய விசாரணி "அபமிருத்து" பற்றிய கட்டுரையில் இருந்து ஒரு பந்தி (கடைசிப் பந்தி)

இனி இவ்வபமிருத்து விதி பற்றி நடப்பதோ அஃதின்றி நடப்பதோவெனச் சிலர் ஆசங்கிப்பார்கள், காரணமின்றிக் காரியமின்மையின் எச்செயலும் ஊழின்றி நடவாது ஊழின்றி நடப்பதொன்றுமாயின் சாஸ்திரங்களெல்லாம் ஏட்டிலெழுதப் படவேண்டும் அபமிருத்தினை இலக்கண மிருவென்று புத்தி நிச்சயம்பண்ணுமிடத்து புத்தி இவ்வாசங்கையெழ மாட்டாது ஊழின்றி அது நடக்குமென்பது யுத்திக்கு அமையாது. அதனை யீண்டு குறிப்பிற் பெருகுமாதலின் இவ்வளவில் விடுகின்றேன். இவ்வபமிருத்து விஷயத்தைப் பிரமோத்தர காண்டத்து அபமிருத்துச் சரித்திரம் சாவித்திரி கதை காந்த புராணத்து மார்க்கண்டேய பட

[9ம் பக்கம் பார்க்க]


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த



புத்தம் புதிய

# யமாஹா

மோட்டோர் சைக்கிள்கள்

விற்பனைக்குண்டு

YAMAHA
It's a way of life.

பினன்ஸ் வசதிகள் கிடைக்கும்

ஆபத்துக்களிலிருந்து உங்களுக்கு பூரண பாதுகாப்பளிக்கும்.

ஹெல்மட் HELMET (கண்களைப் பாதுகாக்கும் கண்ணுடியுடனும், கண்ணுடியில்லாமலும்)

மனதுக்கிதமான நான்குவர்ணங்களில்

## விசேட குறைந்த விலையில்

ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.,

191 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 7680)



# வீர சங்கிலியன்

(பட்டத்துத் தேவியின் குமாரர்கள் இருவரும் கொலைபட்ட பின்னர் சிம்மாசனத்திற்கு மூன்றாவது வாரிசாக சிங்கபரராஜசேகரனின் இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கன் இருந்தான் என்பதையும், வாரிசு வரிசையில் சிங்க பரராஜசேகரனின் மூன்றும் மனைவியான வைப்புப் பெண் என்றழைக்கப்பட்ட மங்கத்தம்மாளின் ஏகபுதல்வன் சங்கிலி ஏழாவது இடத்தைப் பெற்றிருந்தான் என்பதையும், இரு கொலைகள் சம்பந்தமாக சங்கிலி மீது பரவிய வதந்தியை மன்னன் நம்பவில்லையென்பதையும், இளவரசர் இருவரினதும் கொலைகளுக்குப் பின்னர் சிம்மாசனத்திற்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனை சிங்க பரராஜசேகரன் பட்டம் சூட்டிவைக்க முன்வராமல் மௌனமாகவிருந்தான் என்பதையும், சிம்மாசனமேறத் துடித்த பரநிருபசிங்கனே இளவரசர் இருவரையும் கொலைசெய்திருக்கிருனென்ற சந்தேகம் மன்னனுக்கு இறுதியில் ஏற்பட்டதன் நிமித்தமே அவன் அவ்வாறு நடந்திருக்கக் கூடுமென்ற காரணங்களையும் முன்னைய கட்டுரையில் படித்திருப்பீர்கள்.)

[4]

சிங்கவாகு கொலைசெய்யப்பட்ட பின்னர் பட்டஞ் சூட்டப்பட்ட பண்டாரம் நந்த

## ம. க. அ. அந்தனிசில்

(ஆசிரியர் தீப்பொறி)

வனத்தில் வேட்டையாடி வரும்போது அங்கு மறைந்து நின்றவனால் வெட்டுண்டு இறந்துவிட்டானென்றும், சங்கிலிதான் அதை செய்திருப்பான் என்றும் ஒரு சரித்திரக் குறிப்புக் கூறுகிறது!

இந்த விஷமத்தனம் ஏன்?

பட்டத்து இளவரசன் பண்டாரம் வேட்டையாடச் செல்கையில் துணையின்றிச் சென்றிருப்பானு? அப்படி அவன் துணையின்றித் தனியே சென்றிருந்தாலும் நந்தவனத்தின் எந்தப் பகுதிக்கு எப்போது வருவான் என்பது குறிப்பிட்ட ஓரிடத்தில் மறைந்து நின்றவனுக்கு எப்படித் தெரிந்திருக்கமுடியும்?

பண்டாரத்தின் கீழ் ஆட்சியின் இரண்டாம் அதிபதியாகத் திகழ்ந்தவன் பரநிருபசிங்கனும். பண்டாரம் நந்தவனத்திற்குச் சென்றது அவனுக்குத் தெரியாமலிருக்க முடியாது. அத்துடன் பண்டாரத்தைக் கொன்றவன் மறைந்து நிற்க நியாயமில்லை. கொலைகாரன் நேருக்கு நேர் தோன்றித்தான் பண்டாரத்தை வெட்டிச் சாய்த்தபின் மறைந்திருக்கிருன். அப்படியாஞல் பண்டாரம் நந்தவனத்துக்குச் செல்வதை அறிந்த யாரோ ஒருவன் அவனைப் பின் தொடர்ந்து சென்றிருக்கவேண்டும். அவனே இக்கொலையைச் செய்திருக்க வேண்டும். இக்கொலைக்கு எதற்காக நாடகம் நடத்திடப்பட்டதோ யார் அறிவார்? கண்கண்ட சாட்சியில்லாத இக்கொலைக்கு சங்கிலி மீது பரவிய வதந்தியை வைத்துக்கொண்டு சங்கிலியை குற்றம் சுமத்த முடியுமா?

சங்கிலி மீது பரவிய கொலை வதந்திக்கான காரணத்தை அலசி ஆராய வேண்டாமா?

தந்தை சிங்க பரராஜ சேகரன் தன் மகன் சங்கிலியை இக்கொலைக்கு சந்தேகிக்கவில்லையென்றுல் அதுவே சங்கிலி நிரபராதி யென்பதற்குப் போதுமானதன்றோ!

இப்படியிருக்கையில் நந்தவனத்தில் கொலைகாரன் மறைந்திருந்ததை இந்தச் சரித்திரக் குறிப்பு எழுதியவர் எங்கே மறைந்திருந்து பார்த்தாராம்

சிங்கவாகு கொலைசெய்யப்பட்ட பின்னர் அவன் தம்பி பண்டாரத்துக்கு பட்டஞ் சூட்டி வைத்த சிங்கபரராஜ சேகரன் பண்டாரமும், கொலை செய்யப்பட்ட பின்னர் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசான பரநிருபசிங்கனுக்கு பட்டஞ் சூட்டி வைக்காததுடன் தானும் மீண்டும் சிம்மாசனத்தில் அமரவில்லை.

பரநிருபசிங்கனுக்கு பட்டஞ் சூட்டிவைக்காத சிங்க பரராஜசேகரன் மீண்டும் தானே சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோல் ஏந்தியிருக்கலாமே!

பண்டாரம் கொலைசெய்யப்பட்டபின் ஆட்சிக்கு அடுத்த வாரிசாகவிருக்கும் தன் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்கும்படி இரண்டாவது மனைவியான வள்ளியம்மை சிங்கபரராஜசேகரனை வற்புறுத்தாமல் இருந்திருப்பாளா? நெருக்காமல் இருந்திருப்பாளா?

ஆனால் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காமல் தானும் மீண்டும் அரசு கட்டிலேருமல் சிங்க பரராஜ சேகரன் ஆழ்ந்த மௌனத்திலிருந்த நோக்கந்தான் என்ன?

இதுவொரு மிக முக்கியமான விடயம்!

பண்டாரத்தின் கொலையால் சிம்மாசனம் காலியாகிறது காலியான அச்சிம்மாசனத்தில் அடுத்த வாரிசான பரநிருபசிங்கன் அமரவேண்டும். அதற்கு பரநிருபசிங்கனுக்கு சிங்க பரராஜசேகரன் பட்டம் சூட்டிவைக்கவேண்டும் அல்லது சிங்கபரராஜ சேகரனே மீண்டும் அரியாசனமேறி ஆட்சிபுரியவேண்டும்.

ஆனால் இந்த இரண்டுமே நடவாமல் சிங்க பரராஜசேகரனும் இதற்கொரு தீர்க்கமான முடிவை வெளியிடாமல் நீண்ட மௌனத்தில் ஆழ்ந்திருந்ததன் அர்த்தம்தான் என்ன?

சங்கிலி ஆட்சிபீடமேற வேண்டுமென்பது மன்னனின் விருப்பமா? அதுவே அவனது மௌனத்தின் அர்த்தமா?

சிங்க பரராஜசேகரன் தன் இரண்டாம் மனைவியின் மூத்த புதல்வன் பரநிருபசிங்கனுக்கு பட்டஞ்சூட்டிவைக்க விருப்பமில்லாவிடில் தன் மூன்றும் மனைவியின் ஒரே புத்திரன் சங்கிலிக்குப் பட்டஞ்சூட்டி வைத்திருக்கலாமே.

ஆனால் அது எப்படி முடியும்? அதுவும் நடக்கக்கூடிய காரியமா?

பண்டாரத்தின் கொலைக்குப் பின் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசாகவிருந்தவன் பரநிருபசிங்கனே. வாரிசு வரிசையில் சங்கிலியோ ஏழாவது இடத்திலிருந்தான். இது பரநிருபசிங்கனுக்கு சங்கிலி தம்பி முறை.

இந்த நிலையில் சிங்கபரராஜ சேகரன் சங்கிலிக்குப் பட்டஞ் சூட்டிவைத்திருந்தால் வாரிசு முறையை மீறி அண்ணன் இருக்கத் தம்பிக்குப் பட்டஞ் சூட்டிவைத்தானென்ற பெயர் அவனைச் சேராதா?

அத்துடன் சிங்கபரராஜ சேகரன் சம்பிரதாயங்களை யெல்லாம் மீறி தன் வைப்பாட்டி பிள்ளைக்கு பட்டஞ் சூட்டிவைத்தானென்ற அவப்பெயரும் அவனைச் சேருமே!

இக்காரணங்களினுல் தான் பண்டாரத்தின் கொலைக்குப் பின் பரநிருபசிங்கனுக்குப் பட்டஞ்சூட்டி வைக்காத சிங்க பரராஜசேகரன் வேறெந்த முடிவுகளையும் வெளிக்காட்டாமல் இருந்தான் போலும்.

சம்பிரதாயங்களை மீறியேனும் சங்கிலி அரசு கட்டி லேறட்டுமென்பதுதான்

## சங்கிலி எடுத்த முடிவு எதுவாய் இருக்கும்?

சிங்க பரராஜசேகரனின் உள்ளூர விருப்பமும் வெளியில் சொல்ல முடியாத முடிவாகவும் இருக்கவேண்டும். சிங்க பரராஜசேகரனின் பின்னைய நடத்தை இதைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

## சிக்கல்கள் நிறைந்த குடும்பம்

மன்னன் சிங்க பரராஜ சேகரனின் அரச குடும்பம் 3 மனைவியரையும் 7 பிள்ளைகளையும் கொண்ட குடும்பமாக விருந்ததால் சில சிக்கல்களும் முரண்பாடுகளும் தோன்றுவது இயல்பே.

சாதாரண குடும்பங்களில் இரண்டு பெண்டாட்டிக்காரனின் திண்டாட்டத்தை யார்தான் அறியமாட்டார்கள்.

மூத்த மனைவியின் வீட்டில் ஒருவன் சொற்பநேரம் சுணங்கிக்கொண்டாலுமல் உங்களுக்கு அவள்தான் வேண்டும் அப்படியிருக்க ஏன் என்னை எடுத்தீர்கள்' என்று இரண்டாவது மனைவி நடிப்பாள். மூத்த மனைவியின் பிள்ளைகளுக்குத்தானே சொத்துச் சேரும் என் பிள்ளைகளுக்கு என்ன செய்வீர்களென இரண்டாமவள் மைம்மலகி கண்ணீர் வடிப்பாள். மூத்த மனைவி அழகில்லாததால் அல்லது அவளில் விருப்பமில்லாததால் தன்னை எடுத்ததாக இரண்டாவது மனைவி நினைப்பாள். மூத்த மனைவியைவிடத் தான் அழகானவள் என்பதால்தானேயே அவன் தன்னை இரண்டாம் மனைவியாக எடுத்துக்கொண்டதாகவும் நினைக்கும் அவள் மூத்த மனைவிமீது பொருமையும் வஞ்சகமும் கொண்டிருப்பாள், எதற்கும் தானே கூடுதல் உரிமை பாராட்டவும் செய்வாள், இல்லாவிட்டால் அவனுடன் படுக்கையறை வரை சச்சரவு செய்வாள்.

சாதாரண ஒருவனின் குடும்பத்தில் எழும் சிக்கல் அரச குடும்பத்தில் எழாமல் போகுமா? அரச குடும்பமென்றும் அவர்களும் மானிடர் தானே?

மன்னன் சிங்க பரராஜ சேகரனை பொறுத்தவரை அவன் இரண்டு பெண்டாட்டிக்காரனல்ல, மூன்று பெண்டாட்டிக்காரன்.

எனவே பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், போட்டி பொருமைகளுக்கும் குறைச்சல் இருந்திருக்காது. ஆனால் இவையெல்லாம் அரசனின் குடும்ப விஷயமாதலால் வெளியே தெரிய நியாயமில்லை.

மன்னனின் பட்டத்துத் தேவி இராசலட்சுமியம்மாள் மன்னன் இரண்டாவது மனைவியாக வள்ளியம்மையை வரித்துக்கொண்டபோது ஏதேனும் அதிருப்தி தெரிவித்திருப்பாளெனத் தோன்றவில்லை. பதுமையாகவே வாழ்ந்திருக்கிருள். இதனாலேயே மன்னன் இரண்டாவது மனைவியுடன் மூன்றாவது மனைவியையும் எடுக்க முடிந்திருந்தது. அவ்வளவிற்கு பண்பின் உருவாய் பொறுமையின் இரமாய் பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாள் இருந்திருக்கிருள்.

ஆனால் இரண்டாவது மனைவி வள்ளியம்மை எப்படி நடந்துகொண்டிருப்பாள்? பட்டத்துத்தேவியுடன் மன்னன் நெருங்கி வாழ்வதைக்கூட அவள் விரும்பியிருப்பாளோ என்னவோ. ஒருவனுக்கு ஒருத்தி இரண்டாம் பெண்டாட்டியாக வருகிருளென்றுல் அவள் முதல் மனைவியின் சுகத்தைப் பங்குபோட வருகிருள் என்பதுதானே அர்த்தம். சுகத்தில் மட்டுமா? சொத்து, பதவி, பட்டம் எல்லாவற்றிலும் பங்குகேட்டு நெருக்கமாட்டாளா? மன்னன் மறுத்தால் அவனுக்கு அவள் தரும் படுக்கையறை சுகத்தில் பஞ்சத்தனம் காட்டமாட்டாளா?

இப்படியும் நடந்திருக்கக் கூடுமாதலால்தான் இதற்கு மருந்தாக மன்னன் சிங்க பரராஜசேகரன் மூன்றாவதாக மங்கத்தம்மாளை தேர்ந்தெடுத்தான்போலும்.

பட்டத்துத்தேவி இராசலட்சுமியம்மாளுக்கு இரு குமாரர்கள் இருக்கும்போது தனது மூத்த குமாரன் பரநிருபசிங்கனுக்கு என்ன பதவி சுகம் கிட்டுமென்று இரண்டாவது மனைவியான வள்ளியம்மை மன்னனை கேட்காமலா விடுவாள், நெருக்காமலா விடுவாள், வருத்தாமலா விடுவாள்.

மன்னனும் வேண்டியநேரத்தில் வேண்டியது தருவதாக சொல்லாமலா இருப்பான்.

இதனால்தான் மன்னனும் சிங்கவாகுவின் கொலைக்குப் பின் பண்டாரத்துக்குப் பட்டம் சூட்டிவைத்துவிட்டு யாத்திரை தரிசனம் செய்ய சங்கிலியையும் அழைத்துக் கொண்டு கும்பகோணத்துக்குப் போனபோது யாத்திரைப் பிரகாரமாய் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியைக் காரணமாக வைத்து இரண்டாம் மனைவியின் மூத்த குமாரன் பரநிருபசிங்கனுக்கு ஏழு கிராமங்களை பட்டயம் எழுதிக்கொடுத்த

[9ம் பக்கம் பார்க்க]

ஹொண்டா
வியாபாரிகள்
கொழும்பில்!
ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள், மற்றும் இயக்க சக்தி (Power)
தயாரிப்புக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரு வியாபாரிகளாக
விக்ஸ் மார்க்கெட்டிங் லிமிட்டெட்
736, மருதானை ரோட், கொழும்பு-10.
தொலைபேசி: 94918, 91915
என்ற ஸ்தாபனத்தினரை நியமித்துள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறோம்.
சோல் ஏஜண்டுகள்:
ஸ்டபோர்ட் மோட்டார் கம்பனி லிமிட்.,
ஹொண்டா ஹவுஸ்
718/7, மருதானை ரோட், கொழும்பு-10.
தொலைபேசி: 94362, 95414.

